தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

பெரணமல்லூர் அருகே

# அக்காள்-தங்கை பாலியல் பலாத்காரம்

## சென்னை ஓட்டல் தொழிலாளி கைது

சேத்துப்பட்டு, செப்.13-

பெரணமல்லூர் அருகே அக்காள்-தங்கையை பாலியல் பலாத்காரம் செய்த சென்னை ஓட்டல் தொழிலாளியை போலீசார் கைது செய்தனர்.

இந்த சம்பவம் குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

அக்காள்-தங்கை

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் அருகே உள்ள சட்டதாங்கல் கிராமத்தை சேர்ந்தவர்கள் 5 மற்றும் 6 வயது சகோதரிகள். 5 வயது சிறுமி அங்குள்ள அங்கன்வாடி மையத்திலும், 6 வயது சிறுமி 1-ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

அதே பகுதியை சேர்ந்தவர் வேலு (40). சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் சமையல் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வேலு ஊருக்கு வந்திருந்தார். அன்று இரவில் அங்குள்ள ஒரு மண்டபத்தில் அவருடைய உறவினர் வீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வேலு கலந்து கொண்டார். அதே நிகழ்ச்சியில் சிறுமிகளும், அவர்களுடைய பெற்றோரும் பங்கேற்றனர்.

பாலியல் பலாத்காரம்

அப்போது அந்த இரண்டு சிறுமிகளையும் தனியாக அழைத்து வந்த வேலு அவர்களுக்கு பிஸ்கெட் வாங்கிக்கொடுத்து அங்குள்ள பெட்ரோல் பங்க் அருகில் உள்ள மறைவான இடத்திற்கு அழைத்து சென்றுள்ளார். பின்னர் அங்கு வைத்து சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இதில் சிறுமிகள் இருவரும் கூச்சல் போட்டுள்ளனர். உடனே அவர்களை தனது மொபட்டில் ஏற்றிக்கொண்டு மண்டபத்தின் அருகில் கொண்டு விட்டுள்ளார். சிறுமிகள் இருவரும் அழுதுகொண்டே வந்துள்ளனர்.

அதை பார்த்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் அவர்களிடம் விசாரித்தபோது நடந்த சம்பவத்தை கூறி உள்ளனர். உடனே அவர்கள் வேலுவை பிடிக்க சென்றுள்ளனர். ஆனால் அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

ஓட்டல் தொழிலாளி கைது

அதைத்தொடர்ந்து சிறுமிகள் இருவரும் பெரணமல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்க்கப்பட்டு, பின்னர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்து பெரணமல்லூர் போலீஸ் நிலையத்திற்கும், செய்யாறு அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். மேலும் இதுதொடர்பாக அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவாக இருந்த வேலுவை கைது செய்தனர்.

இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.